



# கிளி/விவேகானந்த வித்தியாலயம்

# பரிசளிப்பு விழா அறிக்கை

# 2011-2013

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரிசளிப்பு விழா அறிக்கை
# 2011-2013

KN/VIVEKANANTHA VIDYALAYAM
Library
Ampalkulam, Kilinochchi.
GX 125.
CC 050

கிளி/விவேகானந்த வித்தியாலயம்
அம்பாள்குளம் கிளிநொச்சி
என்றும் ஒளிர்க
KN/VIVEKANANDA VIDYALAYAM - AMPALKULAM. KILINOCHCHI

**கிளி/ விவேகானந்த வித்தியாலயம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தூரநோக்கு (Vision)

எதிர்கால உலகை வெற்றிகொள்ளும் உன்னதமானவர்களை உருவாக்குவோம்.

## பணிக்கூற்று (Mission)

பொருத்தப்பாடான தேர்ச்சிகளினூடாக நவீனதொழில்நுட்ப அறிவுடன், புத்தாக்கமும், செயற்றிறனும் மிக்க ஒழுக்கநெறியைப் பேணி தாய்மொழியையும், தாய்நாட்டையும் நேசிக்கும் ஆரோக்கியமுள்ள இளைய தலைமுறையை வளர்த்தெடுத்தல்.



### விவேகானந்தர் சிந்தனை

தன்னை மறந்து பணியாற்றும்போதுதான்
கடமையில் சாதனை படைக்கமுடியும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடசாலைக் கீதம்

இராகம் :- பிருந்தாவன ஸாரங்கா.

தாளம் :- ஏகம் (சதுஸ்ரநடை)

### பல்லவி

என்றும் ஒளிரும் கிளி விவேகானந்த வித்தியாலயம்
வாழ்கவே வாழ்கவே

### அனுபல்லவி

அறிவு, திறன் மனப்பாங்கு ஆளுமை விருத்தியுடன்
ஆயிரம் ஆயிரம் இறையாசி நிதமோங்கி வாழியவே.

### சரணம்

என்றும் வளர்ச்சி எதிலும் உயர்ச்சி
எங்கும் புகழ் ஓங்கிடவே
சேவை, அன்பு, தியாகம் நன்னெறி கொண்டு வாழியவே

பண்பின் சிகரமாய் கலைகள் மிளிர்ந்திட
கல்விக்கடலென்று நானிலம் போற்றிட
அம்பாள் குளத்தின் அதிசயமாய் -என்றும்
ஒளிவீசி நிலைத்திடவே வாழ்கவே, வாழ்கவே

இயற்றியவர் :- திரு.சி.சுபாகரன் (ஆசிரியர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வித்தியாலய ஸ்தாபகர்
பாராளுமன்ற உறுப்பினரும், பாராளுமன்றக் குழுக்களின் பிரதித் தவிசாளருமான
கௌரவ முருகேசு சந்திரகுமார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளி/ விவேகானந்த வித்தியாலயம்
## பரிசளிப்பு விழா முதல்வர் அறிக்கை 2011–2013

எமது அன்பிற்கும் பெருமதிப்பிற்குமுரிய இன்றைய விழாவின் முதன்மை விருந்தினர்,
எமது பாடசாலையின் ஸ்தாபகரும், பாராளுமன்ற உறுப்பினரும், பாராளுமன்ற குழுக்களின்
பிரதித் தவிசாளருமான கௌரவ முருகேசு சந்திரகுமார் அவர்களே!
சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டிருக்கும் கிளிநொச்சி வலயக் கல்வி பணிமனை கல்வி
அபிவிருத்தி பிரிவு பிரதிக்கல்விப் பணிப்பாளர் திரு. சு. ஸ்ரீகுமரன் அவர்களே!
எமது கோட்டக் கல்விப் பணிப்பாளர் திரு அ. அமிர்தலிங்கம் அவர்களே!
பிரதிக் கல்விப்பணிப்பாளர்களே! உதவிக்கல்விப் பணிப்பாளர்களே! ஆசிரிய ஆலோசகர்களே!
கரைச்சிப்பிரதேச சபையின் கௌரவ உறுப்பினர்களே!
அயற் பாடசாலைகளின் முதல்வர்களே! ஆசிரியர்களே!
கிராமசேவையாளர்களே!
எமது பாடசாலையின் அன்பிற்கினிய பெற்றோர்களே! நலன்விரும்பிகளே!
எமது பாடசாலையின் ஆசிரியர்களே!
அன்பிற்குரிய மாணவச் செல்வங்களே!
உங்கள் அனைவருக்கும் எனது அன்பு வணக்கங்கள்.

கிளிநொச்சி அம்பாள்குளம் கிராமத்தின் அறிவுக்கலசமாக விளங்கும் எமது விவேகானந்த வித்தியாலயத்தின் வரலாற்றுப் பெருமைமிக்க முதலாவது பரிசளிப்புவிழா நிகழ்விலே நாம் ஒன்றுகூடியிருக்கும் இந்த இனிமையான நேரத்திலே சர்வதேசமும் போற்றும் மகான் விவேகானந்தரின் நாமம் தாங்கிய புதிய பாடசாலை ஏன்? எவ்வாறு? உருவானது என்ற வரலாற்றுப் பாதையை மீளப்பார்க்கவேண்டிய தேவை அவசியமான துடன் பலரும் அறிந்துகொள்ளவேண்டுமென்பதையும் கருத்தில் கொண்டு இவ்விடயத் தினைப் பகிர்ந்துகொள்கின்றேன்.

1977, 1983 காலப்பகுதிகளில் ஏற்பட்ட இனக்கலவரத்தினால் மலையகத்திலிருந்த தமிழ் மக்கள் வடக்குநோக்கி நகர்ந்தனர். அவர்களில் அனேகர் கிளிநொச்சி நகரை அண்மித்த பிரதேசங்களில் காடுகளை அழித்து தமது வாழ்விடங்களை அமைத்தனர். அவர்களது கடின உழைப்பால் கிளிநொச்சி மாவட்டத்தை வளப்படுத்தும் பல கிராமங்கள் உருவாகின. அவற்றுள் அம்பாள்குளம் கிராமமும் ஒன்றாகும். இந்தக் கிராமத்திலே தமது வாழ்வை நிலைப்படுத்திய மக்கள் கிளிநொச்சி நகரை அண்மித்த பாடசாலைகளில் தமது பிள்ளைகளை கல்வி கற்பதற்காக அனுப்பினர். பாதுகாப்பற்ற பாதையினூடாக நெடுந்தூரம் பயணம்செய்து கற்கவேண்டிய சூழலும் சமநேரத்தில் ஊக்குவிப்பைத் தரமுடியாது தத்தளித்த வறுமை நிறைந்த வீட்டுச்சூழலும் பிள்ளைகளின் கல்விக்கு பெரும் சவாலாக அமைந்தது. அதன் காரணமாக இடைநடுவிலே கல்வியை அனேகமானோர் கைவிட்ட நிலையில் கூலித்தொழிலை தமது வாழ்வாதாரமாகக் கொண்டு வாழ்க்கையை நகர்த்தினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த நிலையில் இக்கிராம மக்கள் தமது பிள்ளைகள் என்றாலும் இந்தக்கிராமத்தில் கல்வி கற்கக்கூடிய சூழலை உருவாக்கி சிறந்த கற்றற் சூழலை ஏற்படுத்தவேண்டும். அதனால் தமது எதிர்கால சந்ததி கல்வியிலும் பொருளாதாரத்திலும் உயர்நிலை அடைய வேண்டும் என்ற எதிர்பார்ப்புடன் அம்பாள்குள கிராமத்தில் ஏறத்தாழ 5 ஏக்கர் நிலத்தினை பாடசாலை அமைப்பதற்கென ஒதுக்கிவைத்தனர். 1983ம் ஆண்டு குறித்த காணி பாடசாலைக்கு ஒதுக்கப்பட்டமைக்கான சட்டபூர்வமான ஆவணத்தையும் பெற்றுக் கொண்டனர். எனினும் பாடசாலை அமைக்கப்படவில்லை. காலத்துக்குக் காலம் தமக்குப் பாடசாலை வேண்டும் என்ற கோரிக்கையை கிராமத்தின் மக்கள் பிரதிநிதிகள் முன்வைத்த போதும் 2010ம் ஆண்டு ஜனவரி வரை இந்த மக்களின் கோரிக்கை நிறைவேற்றப்பட வில்லை. எனினும் வருடாவருடம் குறித்த காணியை அனைத்து மக்களுமாக இணைந்து பற்றைகளை வெட்டி துப்பரவுசெய்து நிலத்தைப் பாதுகாத்தனர்.

2010 மீள்குடியேற்றத்தின்போது இடர்பட்ட மக்களின் துயர் துடைக்கும் பணியில் கிராமம் கிராமமாக சென்றுவரும் பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ முருகேசு சந்திரகுமார் அவர்கள் அம்பாள்குளம் கிராமத்தை தரிசித்தவேளை அவரிடம் வழக்கம்போல் மக்கள் தமக்கென ஒரு பாடசாலை தேவையென்ற தமது நீண்டநாள் கனவை கோரிக்கையாக அவரிடம் முன்வைத்தனர். அந்தவேளையில் தமது கோரிக்கை மிகக்குறுகிய நான்கு வருட காலத்திலே இவ்வாறான அழகான பாடசாலை வளாகமாக உருவாகி இவ்வாறானதொரு வரலாற்று நிகழ்வும் நடைபெறுமென மக்கள் சற்றேனும் எதிர்பார்த்திருக்கமாட்டார்கள். அருகேயிருக்கும் துர்க்கையம்மனின் ஆசியும் பாராளுமன்ற உறுப்பினர் அவர்களது மக்களுக்கு சேவை செய்யும் உண்மையான தூய உள்ளமும் இணைந்து மக்கள் கனவு நனவாகத் தொடங்கியது. உடனடியாகவே பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ முருகேசு சந்திரகுமார் அவர்கள் உரிய தரப்பினருடன் தொடர்புகொண்டு பாடசாலை ஆரம்பிக்கும் செயற்பாடுகளை ஆரம்பிக்குமாறு அதிகாரிகளுக்கு பணிப்புரை வழங்கினார். அதன் விளைவாக 2010 ஒக்டோபர் விஜயதசமி நாளிலே அன்றைய வலயக்கல்விப்பணிப்பாளரும் இன்றைய வடக்கு மாகாண கல்வி அமைச்சருமான திரு.த.குருகுலராஜா அவர்களின் அனுமதிக்கமைய நானும் என்னோடு இணைந்து சில ஆசிரியர்களும் பாடசாலை அமையப்போகும் இந்த இடத்திற்கு வருகை தந்து ஏடுதொடக்கல் நிகழ்வை நடாத்தி 2011ஆம் ஆண்டில் பாடசாலை ஆரம்பிப்பதற்கான முன்னாயத்த வேலைகளை மேற்கொண்டோம். 03.01.2011ல் பாடசாலையின் கற்றல் செயற்பாடுகள் ஆரம்பமானது.

இன்று இலங்கையின் ஏனைய மாவட்டங்களில் பல சிறிய பாடசாலைகள் மூடப்படும் நிலையில் இந்தக் கிராமத்தில் பாடசாலை ஆரம்பிப்பது தேவையற்றது. ஆரம்பித்தாலும் சிறிது காலத்தில் மூடவேண்டி ஏற்படும் என பலரும் உறுதிபடக் கூறினர். எந்த நிலையிலும் மக்கள் தேவையையே முன்னுரிமைப்படுத்தி அவற்றை நிறைவேற்றுவதில் உறுதியாக நிற்கும் எமது ஸ்தாபகர் பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ முருகேசு சந்திரகுமார் அவர்கள் எதற்கும் செவிமடுக்காது பாடசாலையை ஆரம்பித்ததுடன் அன்று தொடக்கம் இன்று வரை பாடசாலையின் தேவைகள் அனைத்தையுமே நிறைவு செய்து வருகின்றார். மேலும் பாடசாலை வளர்ச்சிக்கு உறுதுணையாக நிற்பதுடன் நாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடர்ப்படும் பொழுதுகளில் எமது இடர்களை நீக்கி சிறிய தேவையாயினும் பெரிய தேவையாயினும் அனைத்தையும் தானே முன்னின்று நிறைவேற்றி வருகின்றார். ஒரு தாய் தன் குழந்தை கேட்காமலேயே அதனது தேவையறிந்து எவ்வாறு செயற்படுவாரோ அவ்வாறு விவேகானந்த வித்தியாலயம் என்ற குழந்தையை இந்த மாவட்டத்தில் உயர்நிலை அடையச் செய்யும் நோக்குடன் வளர்த்துவரும் எங்கள் ஸ்தாபகரே எமது முதலாவது பரிசளிப்பு நாள் நிகழ்விலும் பிரதம விருந்தினராகக் கலந்து சிறப்பிப்பது எமக்கு நிறைந்த மனமகிழ்வைத் தருகின்றது. அவ்வாறே பாடசாலையின் தொடர் வளர்ச்சிக்கு என்றும் உறுதுணையாக இருக்கும் பிரதிக் கல்விப்பணிப்பாளர் திரு.சு.ஸ்ரீகுமரன் அவர்களிடம் பரிசளிப்புவிழா அறிக்கையின் முதற்பிரதியைச் சமர்ப்பிப்பதில் பெருமகிழ்வு அடைகிறேன். பாடசாலை ஆரம்பித்து மூன்று வருடங்களில் எமது பாடசாலையின் முதலாவது பரிசளிப்பு விழாவாகிய இந்த சிறப்பான நாளிலே எமது பாடசாலையின் மூன்று வருட செயற்பாடுகளை ஓர் தொகுப்பாக அறிக்கை வடிவில் சமர்ப்பிப்பதிலே மனநிறைவடைகின்றேன்.

**மாணவர், ஆசிரியர்**

2011ஆம் ஆண்டில் 119 மாணவருடன் ஆரம்பிக்கப்பட்ட எமது பாடசாலையில் தற்போது 692 மாணவர்கள் கல்வி பயில்கின்றனர். ஆசிரியர் எண்ணிக்கை 30ஆகக் காணப்படுவதுடன், 02 பாடசாலைப் பணியாளர்களும் கடமையாற்றுகின்றனர். எனினும் ஏனைய கிராமப்புற பாடசாலைகளைப்போலவே பிரதான பாடங்களுக்குக்கூட ஆசிரியர் பற்றாக்குறையை எதிர்நோக்குகின்றோம். குறிப்பாக விஞ்ஞானம், விவசாயமும் உணவுத தொழில்நுட்பமும், தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம், சுகாதாரமும் உடற்கல்வியும் ஆகிய பாடங்களுக்கு ஒரு ஆசிரியர்கூட இல்லாத நிலையில் தரம் 06 – 11 வரையான மாணவர்கள் 347பேர் மேற்கூறிய பாடங்களை கற்காமலேயே தமது காலத்தை நகர்த்துகின்றனர்.

எவ்வாறெனினும் எமது பாடசாலையில் தொண்டர் ஆசிரியர்களாக இருந்து நியமனம் கிடைத்து ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைக்குச் சென்ற ஆசிரியர்களும், இரு வருட ஒப்பந்தத்தில் யாழ்ப்பாணத்தில் இருந்து வந்து எமது பாடசாலையில் கற்பித்து மீண்டும் தமது சொந்த இடங்களுக்குச் சென்ற ஆசிரியர்களும், எமது பாடசாலையில் வைத்துள்ள அதிக விருப்பம், பிள்ளைகளின் மேலுள்ள அக்கறையின் காரணத்தால் சனி,ஞாயிறு ஆகிய தினங்களில் வருகைதந்து பொதுப்பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கு இலவசமாக வகுப்புக்களை நடாத்தி எமது பாடசாலை வளர்ச்சிக்குத் துணை புரிகின்றார்கள்.

**கல்விச் செயற்பாடுகள்**

எமது பாடசாலையின் கல்விச்செயற்பாடுகளைப் பார்க்கும்போது தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சையில்

2011 – 01 மாணவர்

2012 – 03 மாணவர்கள்

2013 – 06 மாணவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சித்தியடைந்ததுடன் 2013ஆம் ஆண்டில் மாவட்ட மட்டத்தில் புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேற்றின் அடிப்படையில் எமது பாடசாலை 07ஆவது நிலையில் முன்னிலையில் உள்ளது.

க.பொ.த சாதாரண தரப் பரீட்சையிலும் தொடர்ச்சியாக அதிகரிப்பைக் காட்டும் அதேவேளை 2012ஆம் ஆண்டில் கணித பாடத்தில் தோற்றிய அனைத்து மாணவர்களும் (28மாணவர்கள்) சித்தியடைந்து கிளிநொச்சி மாவட்டத்திலேயே முதன்முதலாக கணித பாடத்தில் 100% சித்தி என்ற சாதனையை படைத்தார்கள்.

**இணைபாடவிதானம், விளையாட்டு**

எமது பாடசாலையின் உடற்பயிற்சி ஆண்கள் அணியினர் பாடசாலை ஆரம்பித்த வருடம் தொடக்கம் 2011, 2012, 2013 எனத் தொடர்ச்சியாக மாவட்ட மட்டத்தில் முதலிடத்தைப்பெற்று சாதனை படைத்து வருகின்றனர். மேலும் கரப்பந்தாட்டம், தனி விளையாட்டுக்களிலும் மாவட்ட மட்டத்தில் வெற்றி பெற்று மாகாண மட்டப்போட்டிகளிலும் பங்குபற்றி வருகின்றனர்.

**தமிழ்மொழித்தினம்**

தமிழ் மொழித்தினப் போட்டியில் சிறுகதை, கவிதை, தனிநடனம், பாடல், குழுநடனம் என்பவற்றில் மாவட்ட நிலையில் முதலிடங்களைப் பெற்றுள்ளனர்.

**ஏனையவை**

கணித நாடக போட்டி, விரைவு கணிதப்போட்டி, சிறுவர் நாடகம் மற்றும் ஆங்கில தினப் போட்டிகளிலும் எமது மாணவர்கள் கோட்ட, வலய மட்டங்களில் வெற்றி பெற்று சாதனை படைக்கின்றனர்.

**பௌதிக வளம்**

எமது பாடசாலை 90அடி தற்காலிகக் கொட்டகையினாலேயே முதன்முதலாக ஆரம்பிக்கப்பட்டது. தொடர்ந்து 2மில்லியன் ரூபா செலவில் இரு கட்டடங்கள் யுனிசெவ் அமைப்பினால் திருத்தப்பட்டன. தொடர்ந்து பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் 03 மில்லியன் ரூபா செலவில் மேலும் இரு கட்டடங்கள் திருத்தப்பட்டதுடன், 05 மில்லியன் ரூபா செலவில் 120அடிநீள புதிய வகுப்பறை கட்டடத்தொகுதியும் அமைத்துத்தரப்பட்டது. அதனைத் தொடர்ந்து 67.5 மில்லியன் ரூபா செலவில் யுனிசெவ் அமைப்பின் உதவியுடன் அலுவலக, வகுப்பறை உள்ளிட்ட கட்டடத்தொகுதியும் அமைக்கப்பட்டு 03 வருடத்துக்குள் வளம் பொருந்திய பாடசாலையாக அனைவரும் குறிப்பிடுமளவுக்கு உயர்ந்து நிற்கின்றது. இந்த உயர்வின் பின்னால் எமக்காக உழைத்த பெருமை எங்கள் பாடசாலையின் ஸ்தாபகர் கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார் அவர்களுக்கே உரித்தாகும்.

**பாடசாலை அபிவிருத்திச் சங்கம்**

எங்கள் பாடசாலையின் ஆரம்ப செயற்பாடுகளுக்காக பாடசாலை அபிவிருத்திச்சங்க இடைக்கால நிர்வாகம் ஒன்றினை ஆரம்பித்தோம். அந்த நிர்வாகத்தில் கிராம அபிவிருத்திச்சங்கத் தலைவர் திரு.து.கிருஸ்ணசாமி அவர்களும், கிராமத்தைச் சேர்ந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு.சி.பாஸ்கரன் அவர்களும் இணைந்து பாடசாலையின் ஆரம்ப செயற்பாடுகளுக்கு முழுமையான ஒத்துழைப்பு எமக்கு நல்கினர். தொடர்ந்து ஒவ்வொரு வருடமும் புதிய நிர்வாகம் தெரிவுசெய்யப்பட்டு வருகின்றது. தெரிவுசெய்யப்படும் நிர்வாகத்தினர் எப்போதும் பாடசாலை முகாமைத்துவக் குழுவினருடனும் பாடசாலை ஸ்தாபகருடனும் இணைந்து பாடசாலை வளர்ச்சிக்காக கடுமையாக உழைத்துவருகின்றனர். அவர்களது உழைப்பு பாடசாலையின் பல்வேறு நிகழ்வுகளிலே சிறப்பான வெளியீடாக அமைகிறது. மேலும் பாடசாலை சுற்றுப்புறச் சூழலை தூய்மையாகப் பேணுவதிலும் பாடசாலையின் வளாகத்தினைப் பசுமையாக வைத்திருப்பதிலும் அனைத்துப் பெற்றோருமே முழுமையாகத் தமது பங்களிப்பினைத் தொடர்ந்தும் வழங்கி வருகின்றனர்.

**தமிழ் இன்னியம், சாரணிய அணி**

எமது பாடசாலையின் சாரணிய அணி சிறப்பாகச் செயற்படுவதுடன், எமது பாடசாலைக்கென்றே தனித்துவமான அணியாக தமிழ் இன்னிய அணியினர் உள்ளனர். தமிழ் பாரம்பரிய வரவேற்பை வழங்கும் தனித்துவமான பண்பாட்டு அணியாக இந்த அணியினர் திகழ்கின்றனர். எமது மாவட்டத்திலும், யாழ்ப்பாண மாவட்டத்திலும்கூட அதிமேதகு ஜனாதிபதி தொடக்கம், பல பிரமுகர்களை சிறப்பாக வரவேற்பவர்களாக இந்த அணி காணப்படுவது பாடசாலைக்கு பெருமை சேர்க்கும் விடயமாக அமைகின்றது.

பரிசளிப்பு விழாக்கள் என்பவை வருடந்தோறும் நடாத்தப்பட வேண்டியவை. இவற்றை நடாத்துகின்றபோது மாணவர்கள் தாமும் பரிசினைப் பெறவேண்டுமென்ற ஆர்வத்துடன் படிப்பதற்குத் தூண்டப்படுகின்றனர். எனினும் புதிய பாடசாலை என்பதால் ஏற்பட்ட இடப்பற்றாக்குறை, தொடர்ச்சியாக நடைபெற்ற கட்டட நிர்மாண வேலைகள் காரணமாக மூன்று வருடங்களை ஒன்றிணைத்து இன்று பரிசளிப்பு விழா நடாத்துகின்றோம். தொடர்ந்துவரும் காலங்களில் ஒவ்வொரு வருடமும் பரிசளிப்பு விழா நடாத்தும் செயற்பாட்டினை நாம் மேற்கொள்வோம் என்பதையும் அனைவருக்கும் கூறிக்கொள்ள விரும்புகின்றேன்.

ஒரு கிராமத்தின் அபிவிருத்தி என்பது கல்வி அபிவிருத்தியிலேயே தங்கியுள்ளது. அந்தவகையில் அம்பாள்குளக் கிராமத்திலும், அதனைச் சூழவுள்ள கிராமங்களிலும் வாழும் சிறார்கள் சிறந்த கல்விச்சூழலை பெற்று எதிர்காலத்தில் உயர் தொழில்களில் பிரவேசிக்கவும், நாட்டின் பொருளாதார விருத்திக்குத் தமது பங்களிப்பை வழங்கவும் இந்தப்பாடசாலை என்றும் துணைபுரியும்.

எமது பாடசாலையின் வளர்ச்சிக்குக் காரணமாக இருக்கின்ற எமது பெற்றோரும், நலன்விரும்பிகளும், கிராம மக்களும் இணைந்து பாடசாலைக்கல்வியை அனைவரும் பெறுவதற்காக உழைக்க முன்வரவேண்டும். நான் நினைக்கின்றேன் கிளிநொச்சி மாவட்ட வரலாற்றிலேயே, ஆரம்பித்து மிகக்குறுகிய மூன்று ஆண்டு காலத்திலே இவ்வாறான ஏனையோர் வியந்து பார்க்கும் அளவுக்கு பௌதீக வளங்களைப் பெற்று சிறந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாதனைகளையும் படைத்த பாடசாலையென்றால் அது விவேகானந்த வித்தியாலயமாகவே இருக்கமுடியும். இந்த வேகமான உயர்வுக்குக் காரணமான பாடசாலை ஸ்தாபகர் அவர்களை பாடசாலையும், சமூகமும் என்றும் நன்றியுணர்வோடு போற்றக் கடமைப் பட்டுள்ளது. கவனிப்பாரற்று இருந்த கிராமத்திலே அழகான கல்விக்கூடத்தினை உருவாக்கி, அதற்கான அனைத்து வளங்களையும் தொடர்ச்சியாக வழங்கி, வடக்கு மாகாணத்தில் மட்டுமல்ல இலங்கை நாடாளுமன்றத்திலேயே இந்தக் கிராமத்துச் சிறார்களின் கலை நிகழ்வுகளை ஆற்றுகை செய்யவைத்த பெருமை எமது ஸ்தாபகரையே சாரும். இதனை எமது மக்கள் என்றுமே மறக்கமாட்டார்கள் ஏனென்றால் அம்பாள்குளம் கிராமத்தின் வரலாற்றுப் பெருமைமிக்க செயற்பாடாகவே கிளி/விவேகானந்த வித்தியாலயம் அனைவராலும் நோக்கப்படுகின்றது.

மேலும் விவேகானந்த வித்தியாலயத்தின் வளர்ச்சிக்கு பாடசாலை ஆரம்பத்திலேயே கல்விப்பணிப்பாளராக இருந்த தற்போதைய கல்வி அமைச்சர் கௌரவ த.குருகுலராஜா அவர்களும், தற்போதைய எமது கல்விப்பணிப்பாளர் திரு.க.முருகவேல் அவர்களும் என்றுமே துணை நின்று செயற்பட்டு வருகின்றார்கள். அவர்களோடு எமது பள்ளியின் வளர்ச்சிக்குத் துணை நின்ற அனைத்து கல்விசார் ஏனைய துறைசார் பெரியோர்கள், உத்தியோகத்தர்கள் அனைவரையும் என்றும் நாம் மறந்து விடவில்லை.

அம்பாள்குளம் கிராமத்தில் அதிசயமாக திகழப்போகும் எமது பாடசாலை எங்களது ஸ்தாபகரின் விருப்பம் போல அறிவும், திறனும், எதிர்கால சவால்களை வெற்றிகொள்ளும் ஆற்றலும் இணைந்த, சிறந்த ஒழுக்க விழுமியம் கொண்ட மாணவர்களின் உருவாக்கத்திற் கான தளமாக என்றும் இருக்கவும், கிளிநொச்சி மாவட்டத்தின் முதல் நிலைப் பாடசாலையாக உருவாகவும் அனைவரும் இணைந்து ஒன்றுபட்டு உழைப்போம் என உறுதி கூறுகின்றோம்.

இன்றைய நிகழ்விலே முதன்மை விருந்தினராகக் கலந்து எம்மை மகிழ்விக்கும் எங்கள் பாடசாலை ஸ்தாபகர் அவர்களுக்கும், எமது பெருமைக்குரிய வலயக்கல்விப் பணிப்பாளர் அவர்களுக்கும், கல்விசார் பெரியோர்கள், பெற்றோர்கள், நலன்விரும்பிகள் அனைவருக்கும் எமது நன்றியையும், பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நன்றி

**முதல்வர்**

**கிளி/ விவேகானந்த வித்தியாலயம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





வித்தியாலய முதல்வர்
திருமதி ஜெயலட்சுமி மாணிக்கவாசகன் SLPS 2.II (B.Com,Dip. in Edu., M.Ed.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**2010 இல் எமது பாடசாலை**



**2011 இல் எமது பாடசாலை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**2012 இல் எமது பாடசாலை**



**2013 இல் எமது பாடசாலை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடஅடைவுகளினடிப்படையில் பரிசில் பெறும் மாணவர் விபரம் – 2011

**தரம் 3**

1. சி.இசைப்பிரியா - தமிழ், சைவசமயம், ஆங்கிலம், சுற்றாடல்
2. ச.யோன்சிகா - கத்தோலிக்கம்
3. சா.கஜானன் - கணிதம்

**தரம் 4**

1. சா.கௌசிகா - சைவசமயம், தமிழ்
2. ச.பிளக்சிகா - கணிதம், சுற்றாடல், கத்தோலிக்கம்
3. உ.மதுசாளினி - ஆங்கிலம்

**தரம் 5**

1. ஸ்ரீ.அறிஞன் - தமிழ், கணிதம், ஆங்கிலம், சுற்றாடல்
2. ஸ்ரீ.பிரணவி - சைவசமயம்

**தரம் 6**

1. சி.புவனேஸ்வரி - சமயம்
2. சி.சிந்துஜன் - ஆங்கிலம், கணிதம், விஞ்ஞானம், சுகாதாரம்
3. ப.டக்சாளினி - கிறிஸ்தவம், தமிழ்
4. ப.ஜெபதீபா - புவியியல், குடியுரிமை, வரலாறு

**தரம் 7**

1. சி.பார்த்தீபன் - சைவசமயம், தமிழ், ஆங்கிலம், கணிதம், வரலாறு, விஞ்ஞானம், சுகாதாரம்
2. ச.நிருஷா - குடியுரிமை
3. இ.கோகுலராஜ் - புவியியல்

**தரம் 8**

1. பா.கீர்த்திகா - சைவசமயம், தமிழ், ஆங்கிலம், கணிதம், வரலாறு, குடியுரிமை, விஞ்ஞானம், சுகாதாரம், புவியியல்
2. ம.சனோஜன் - கணிதம்
3. வ.தனுசியன் - வரலாறு

**தரம் 9**

1. வ.திவியா - சைவசமயம், தமிழ், ஆங்கிலம், கணிதம், வரலாறு குடியுரிமை
2. அ.ஏஞ்சலினா - கிறிஸ்தவம், விஞ்ஞானம், புவியியல்
3. சா.ரசிகன் - சுகாதாரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தரம் 10

1. சி.நிவேதா - சமயம், தமிழ், ஆங்கிலம், வரலாறு
2. இ.நவநீதன் - கணிதம், விஞ்ஞானம்

## தரம் 11

1. வ.கஜானி - சமயம், ஆங்கிலம்
2. ந.தினேஸ்காந் - தமிழ், கணிதம், விஞ்ஞானம், வரலாறு

# 2012

## தரம் 3

1. அ.ஜெனிஸ்டன் - தமிழ், கணிதம், ஆங்கிலம், சுற்றாடல், கத்தோலிக்கம்
2. பி.பிரதிக்ஷா - சைவசமயம்

## தரம் 4

1. சி.தேனிலவன் - தமிழ்
2. சி.இசைப்பிரியா - கணிதம், ஆங்கிலம், சுற்றாடல், சைவசமயம்
3. ச.யோன்சிகா - கத்தோலிக்கம்

## தரம் 5

1. ச.பிளக்சிகா - தமிழ், சுற்றாடல்
2. சா.கௌசிகா - சைவசமயம், கணிதம்
3. உ.மதுசாளினி - ஆங்கிலம்

## தரம் 6

1. ஸ்ரீ.அறிஞன் - சைவசமயம், கணிதம், விஞ்ஞானம், சுகாதாரம்
2. ஜெ.நிரோஜி - தமிழ், வரலாறு, புவியியல்
3. ஸ்ரீ.பிரணவி - குடியியல்

## தரம் 7

1. மா.கதிர்முகிலன் - சைவசமயம், தமிழ், ஆங்கிலம், கணிதம், குடியியல், விஞ்ஞானம், சுகாதாரம், புவியியல், வரலாறு

## தரம் 8

1. ஏ.குலாசினி - சைவசமயம், தமிழ்
2. பா.துவாரகா - ஆங்கிலம், கணிதம், வரலாறு
3. ம.பேபிகீர்த்திகா - விஞ்ஞானம், புவியியல், குடியியல்

## தரம் 9

1. பா.கீர்த்திகா - சைவசமயம், தமிழ், ஆங்கிலம், கணிதம், குடியியல், விஞ்ஞானம்,சுகாதாரம், புவியியல்
2. ம.சனோஜன் - வரலாறு
3. அ.பிரியதர்சினி - கிறிஸ்தவம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தரம் 10

1. சி.நிவேதனா - சைவசமயம், விஞ்ஞானம், வரலாறு
2. ஜெ.கீர்த்திகா - தமிழ், ஆங்கிலம், கணிதம்
3. அ.ஏஞ்சலின் பிறின்ஸி - கிறிஸ்தவம்

## தரம் 11

1. பொ.மகிவரசன் - சமயம், தமிழ், ஆங்கிலம், வரலாறு
2. இ.நவநீதன் - கணிதம், விஞ்ஞானம்

# 2013

## தரம் 3

1. ச.டதுசன் - தமிழ், கணிதம், ஆங்கிலம், சுற்றாடல், சைவசமயம்

## தரம் 4

1. அ.ஜெனிஸ்டன் - தமிழ், கணிதம், ஆங்கிலம், சுற்றாடல், கத்தோலிக்கம்
2. சி.லக்சனா - சைவசமயம்

## தரம் 5

1. சி.இசைப்பிரியா - தமிழ், ஆங்கிலம்
2. ர.தமிழ்நிலா - சைவசமயம்
3. ச.யோன்சிகா - கத்தோலிக்கம்
4. வி.நிறோஜன் - கணிதம்
5. சி.தேனிலவன் - சுற்றாடல்

## தரம் 6

1. யோ.நெருஜா - கிறிஸ்தவம்
2. இ.எழில்நிலா - சைவசமயம், தமிழ், கணிதம்
3. லோ.யாழினி - ஆங்கிலம்
4. த.தனுஜன் - விஞ்ஞானம்
5. அ.கம்சாயினி - வரலாறு, குடியியல்
6. ச.பிளசியா - புவியியல்
7. சி.சிந்துஜா - சுகாதாரம்

## தரம் 7

1. ஸ்ரீ.அறிஞன் - ஆங்கிலம், கணிதம், விஞ்ஞானம், வரலாறு, புவியியல்,தமிழ், சுகாதாரம்
2. ஜெ.நிரோஜி - சைவசமயம்

## தரம் 8

1. மா.கதிர்முகிலன் - சைவசமயம், ஆங்கிலம், கணிதம், விஞ்ஞானம், புவியியல், தமிழ், சுகாதாரம்
2. ச.சிந்துஜன் - குடியியல், வரலாறு
3. ப.டக்சாளினி - கிறிஸ்தவம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தரம் 9

1. ம.பேபிகீர்த்திகா - சைவசமயம், ஆங்கிலம், விஞ்ஞானம், வரலாறு, புவியியல்
2. சி.பார்த்தீபன் - தமிழ், சுகாதாரம்
3. கி.கீர்த்தனா - கணிதம்
4. ய.தர்சனா - குடியியல்

## தரம் 10

1. க.கலையாழினி - சைவசமயம்
2. பா.கீர்த்திகா - தமிழ், ஆங்கிலம், வரலாறு
3. ம.சனோஜன் - கணிதம், விஞ்ஞானம்
4. போ.மேரிநித்தா - கிறிஸ்தவம்

## தரம் 11

1. ஜெ.கீர்த்திகா - சைவசமயம், கணிதம், ஆங்கிலம்
2. சி.நிவேதனா - தமிழ், விஞ்ஞானம், வரலாறு
3. அ.ஏங்சலின் பிறின்சி - கிறிஸ்தவம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பாராளுமன்ற நவராத்திரி விழா 2013

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உடற்பயிற்சி அணி 2013

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இணைப்பாடவிதான செயற்பாடுகள்
# 2011

## ❖ விளையாட்டு

❍ உடற்பயிற்சி அணி ஆண்கள் - முதலாம் இடம் ( மாவட்ட மட்டம்)

| | | | |
|---|---|---|---|
| ந.தினேஸ்காந் | பெ.மேனுஜன் | த.பிரதீபன் | ப.பத்மகுமார் |
| இ.சுஜிதன் | அ.அமிர்தவிதுசன் | அ.நொவின்பிரகாஸ் | ப.லிந்துஜன் |
| ஞா.நிறோஜன் | யூ.டிலக்சன் | சி.லக்ஷன் | இ.ஐங்கரன் |
| மு.ஜீவகரன் | சி.சயந்தன் | க.தினேஸ் | ஆ.சிந்துஜன் |
| தே.மௌலிதாசன் | சா.ரசிகன் | சி.பிருந்தன் | சு.சுரேஸ்குமார் |
| ம.சனூஜன் | சு.அஜித்குமார் | இ.தனுஷன் | |
| ம.யதுர்சன் | மு.தேனுஜன் | க.அகிலன் | |






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❍ உடற்பயிற்சி அணி பெண்கள் - மூன்றாம் இடம் (கோட்ட மட்டம்)

| | | | |
|---|---|---|---|
| ச.டல்ஷனா | இ.வினோதினி | பி.சுகன்யா | வி.குகேந்தினி |
| செ.லூசியாமேரி | பா.கீர்த்திகா | தே.யசிந்தா | யோ.சுகிர்தா |
| இ.கீர்த்திகா | வ.விஜிதா | சு.சரண்யா | லோ.டல்சிகா |
| தே.சாதனா | ஜெ.ஜெயந்தினி | ஞா.அபிலாஷினி | ப.சர்மிளா |
| சி.அயந்தினி | அ.சந்திராவதி | வ.திவ்யா | வெ.சயந்தினி |
| ம.கோபிகா | ச.தேவகிருபை | வா.சிவறஞ்சினி | |
| தா.கிருஸ்ரிகா | கே.தபிலாஷா | சி.சுதர்சினி | |
| வி.தனோஷா | ச.ரதீசியா | பு.லோஜினி | |

❍ இலங்கை பாடசாலை உதைபந்தாட்ட சம்மேளனம் நடாத்திய உதைபந்தாட்டம்
17 வயது பெண்கள் அணி - இரண்டாம் இடம் (மாகாண மட்டம்)

| | | | |
|---|---|---|---|
| கோ.சுஜாத்தா | ம.கோபிகா | ச.பிரசாந்தினி | வா.சிவரஞ்சினி |
| ஞா.அபிலாஷா | பி.சுகன்யா | வெ.வனிதா | செ.லூசியாமேரி |
| வி.குகேந்தினி | பி.நிலானி | ச.ரதீசியா | |
| வி.தனோசா | அ.சந்திராவதி | வ.விஜிதா | |

❍ சமூக விஞ்ஞானப் போட்டி
சி.பார்த்தீபன் - மூன்றாம் இடம்

## 2012

❖ விளையாட்டு உடற்பயிற்சி அணி ஆண்கள் - முதலாம் இடம் ( மாவட்ட மட்டம்)

| | | | |
|---|---|---|---|
| ந.தினேஸ்காந் | ர.தினோஜன் | சி.லக்ஷன் | ந.சஜீவன் |
| இ.சுஜிதன் | யூ.டிலக்சன் | க.தினேஸ் | சு.சுரேஸ்குமார் |
| ஞா.நிறோஜன் | இ.விஜயராஜ் | சி.பிருந்தன் | க.வருண்ராஜ் |
| மு.ஜீவகரன் | பு.பிரதாப் | இ.தனுஷன் | வ.தனுசியன் |
| கே.மௌலிதாசன் | ச.அஜித்குமார் | க.அகிலன் | சி.பார்த்தீபன் |
| ம.சனூஜன் | மு.தேனுஜன் | ப.பத்மகுமார் | க.பவித்திராகரன் |
| மு.துவாரகன் | அ.அகிலன் | ப.லிந்துஜன் | ப.கஜந்தன் |
| பெ.மேனுஜன் | அ.நொவின்பிரகாஸ் | வி.அனுசன் | பி.நிதர்சன் |





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❍ கரப்பந்து 17 வயது ஆண்கள் அணி - முதலாம் இடம் (மாவட்ட மட்டம்)

| | | | |
|---|---|---|---|
| க.வருண்ராஜ் | சி.பிரியதர்சன் | ஞா.நிறோஜன் | இ.மதன்ராஜ் |
| அ.நொவின்பிரகாஸ் | மு.தேனுஜன் | க.தினேஸ் | சி.சுதர்சன் |
| சி.லக்ஷன் | கே.மௌலிதாசன் | சு.சுரேஸ்குமார் | ப.லிந்துஜன் |

❍ குண்டு போடுதல் 15 வயது ஆண்

ச.மதுசன் - முதலாம் இடம் (மாவட்ட மட்டம்)

❍ உயரம் பாய்தல் 15 வயது ஆண்

வ.தனுசியன் - முதலாம் இடம் (மாவட்ட மட்டம்)



ச.மதுசன்



வ.தனுசியன்

❍ 800மீற்றர் ஓட்டம் 19 வயது ஆண்

சி. பிரிந்தன் - மூன்றாம் இடம் (மாவட்ட மட்டம்)



சி. பிரிந்தன்

❖ **தமிழ்த்தினம்**

❍ சி.பிரிந்தன்

❍ கதைகூறல் பிரிவு 1

கி.தனுசன் - மூன்றாம் இடம் (கோட்ட மட்டம்)

❍ கட்டுரை பிரிவு 2

பா.கீர்த்திகா - இரண்டாம் இடம் (கோட்ட மட்டம்)

❍ தனி இசை பிரிவு 3

பி.பிரியதர்சினி - மூன்றாம் இடம் (கோட்ட மட்டம்)

❖ **கணிதப் போட்டிகள்**

❍ கணித நாடகம் - முதலாம் இடம் (மாவட்ட மட்டம்)



| | |
|---|---|
| இ.விஜயராஜ் | இ.கௌதமி |
| உ.சாளினி | மு.துவாரகன் |
| த.சுகன்யா | ப.சர்மிளா |
| ச.நிதர்சன் | கி.கீர்த்தனா |
| ச.சபீனா | அ.அகிலன் |
| த.சுஜீபா | வி.மிதுஜா |
| வி.அனுசன் | சு.சுமித்திரா |
| யோ.கிசாந்தினி | க.ஜெயதீபன் |
| செ.தனுசிகா | பி.பிரகாஷ் |
| பு.பிரதாப் | கு.டிசாந்தினி |
| சி.பார்த்தீபன் | ச.தமிழ்ச்செல்வன் |
| க.விந்துஜா | மு.ஜீவகரன் |
| க.ஈஸ்வரன் | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❖ **ஆரம்பப்பிரிவு போட்டிகள்**

❍ சிறுவர் நாடகம் - மூன்றாம் இடம் (மாவட்ட மட்டம்)

| | |
|---|---|
| கி.தனுசன் | இ.சாதனா |
| இ.கலாதரன் | ம.ஜினோமிதா |
| ச.பிளசியா | ஜெ.கோபிகா |
| சி.சிந்துஜா | பு.சிந்துஜன் |
| க.லக்சிகா | சி.இசைப்பிரியா |
| யோ.நெருஜா | நே.டிலக்சனா |
| ர.டினோஜினி | இ.லக்சிகா |



## 2013

❖ **விளையாட்டு**

❍ உடற்பயிற்சி அணி ஆண்கள் - முதலாம் இடம் ( மாவட்ட மட்டம்)

| | | | |
|---|---|---|---|
| ஞா.நிறோஜன் | சு.அஜித்குமார் | ஆ.பவித்திராகரன் | இ.கோகுலராஜ் |
| மு.ஜீவகரன் | ப.கஜேந்திரன் | சி.பார்த்தீபன் | இ.துஸ்யந்தன் |
| கே.மௌலிதாசன் | இ.தனுஷன் | சா.ரசீகன் | சு.துஸ்யந்தன் |
| ம.சனூஜன் | க.அகிலன் | இ.சுஜிதன் | நி.நிதர்சன் |
| மு.துவாரகன் | ப.பத்மகுமார் | ர.தினோஜன் | பு.லஜிதன் |
| இ.விஜயராஜ் | ந.சஜீவன் | வி.விதுசன் | அ.ஜெனிற்றன் |
| பு.பிரதாப் | வ.தனுசியன் | செ.நிந்துஜன் | சி.சிந்துஜன் |
| க.தூயவன் | ச.நிதர்சன் | பு.பிரதாப் | ர.தினோஜன் |





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

○ உடற்பயிற்சி அணி பெண்கள் - மூன்றாம் இடம் (மாவட்ட மட்டம்)

| | | | |
|---|---|---|---|
| பா.துவாரகா | சு.சாணியா | த.சுகன்ஜா | வெ.சயந்தினி |
| யோ.சுகிர்தா | பே.குலாசினி | அ.பிரியதர்சினி | வ.திவியா |
| செ.விதுஷா | க.வளர்மதி | ர.விதுர்சினி | சு.விதுஜா |
| ஜெ.கஜேந்தினி | சி.சுயந்தினி | யோ.கிசாந்தினி | இ.தயாளினி |
| நே.சாதனா | உ.சாளினி | ஜெ.டயானி | ப.தமிழினி |
| உ.குயின்சினி | சி.நிவேதா | வி.தனோசா | ப.சர்மிளா |
| ச.லோஜினி | ஜெ.தனுசா | தி.தேனுஜா | ஞா.அபிசாளினி |

○ 100மீற்றர் ஓட்டம் 15 வயது பெண்

உ.குயின்சினி - இரண்டாம் இடம் (மாவட்ட மட்டம்)


உ.குயின்சினி

○ 200மீற்றர் ஓட்டம் 15 வயது பெண்

உ.குயின்சினி - முதலாம் இடம் (மாவட்ட மட்டம்)

○ 400மீற்றர் ஓட்டம் 15 வயது பெண்

உ.குயின்சினி - இரண்டாம் இடம் (மாவட்ட மட்டம்)

○ 4 x 400மீ அஞ்சல் 15 வயது பெண் முதலாம் இடம் (மாவட்ட மட்டம்)

○ உயரம் பாய்தல் 15 வயது ஆண்

சி.பார்த்தீபன் - இரண்டாம் இடம் (மாவட்ட மட்டம்)


சி.பார்த்தீபன்

○ குண்டு போடுதல் 15 வயது பெண்

ச.நிருசா - மூன்றாம் இடம் (கோட்ட மட்டம்)

○ 100 மீ ஓட்டம் 15 வயது ஆண்

மு.துவாரகன் - மூன்றாம் இடம் (கோட்ட மட்டம்)

○ உயரம் பாய்தல் 17 வயது ஆண்

வ.தனுசியன் - இரண்டாம் இடம் (கோட்ட மட்டம்)

○ தட்டு வீசுதல் 17 வயது ஆண்

வ.தனுசியன் - மூன்றாம் இடம் (கோட்ட மட்டம்)

○ உயரம் பாய்தல் 13 வயது ஆண்

கலைவேந்தன் - இரண்டாம் இடம் (கோட்ட மட்டம்)

○ 4 x 400மீ அஞ்சல் 13 வயது ஆண் முதலாம் இடம் (கோட்ட மட்டம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❖ **தமிழ்த்தினம்**

- கவிதை பிரிவு 4 போ.மேரிநித்தா - மூன்றாம் இடம் (கோட்ட மட்டம்)
- சிறுகதை ஆக்கம் பிரிவு 4 சி.நிவேதனா - இரண்டாம் இடம் (கோட்ட மட்டம்)
- தனி நடனம் பிரிவு 4 வி.தனோசா - மூன்றாம் இடம் (கோட்ட மட்டம்)

- குழு நடனம் **"ஆதிவாசி"** முதலாம் இடம் (மாவட்ட மட்டம்)

| | | | |
|---|---|---|---|
| சி.பார்த்தீபன் | ர.தினோஜன் | அ.அகிலன் | வி. துஷ்யந்தன் |
| க.தனுசன் | ச.நிதர்சன் | சி.சிந்துஜன் | த.ரஜீபன் |
| சி.திவாகரன் | இ.டிசாந்தன் | | |

❖ **தமிழ்ச்சங்கப் போட்டிகள்**

- இலக்கியத்தேர்வு
  - பெ.கோகுலன் - இரண்டாம் இடம்
  - ம.கயலரசி - மூன்றாம் இடம்
  - தேவயாணி - மூன்றாம் இடம்
  - பு.பர்மிசா - இரண்டாம் இடம்

ஊக்கப் பரிசு கி.விதுசன்

- தமிழ்த்தாய் வாழ்த்து - மூன்றாம் இடம்

| | | | |
|---|---|---|---|
| பி.பிரியதர்சினி | ஏ.குலாசினி | பா.துவாரகா | மா.கதிர்முகிலன் |
| உ.சாளினி | யோ.சுகிர்தா | பு.டனுஜா | ச.சபீனா |

- வரவேற்பு நடனம் - முதலாம் இடம்

| | | | |
|---|---|---|---|
| ஜெ.நிரோஜி | ஸ்ரீ.பிரணவி | கி.கிருசாந்தினி | சா.சாருண்யா |
| வி.யதுர்சா | யோ.கிருசாளினி | சு.சரணியா | ய.தர்சனா |
| ந.விதுர்சனா | ப.டக்சாளினி | சி.புவனேஸ்வரி | க.லக்சிகா |
| க.கோபிகா | ந.ஜினோமிதா | ச.பிளக்சிகா | த.டினோஜினி |
| ப.தமிழினி | | | |

- நாட்டார் பாடல் - முதலாம் இடம்

| | | | |
|---|---|---|---|
| மா.கதிர்முகிலன் | பு.டனுசா | பா.துவாரகா | யோ.சுகிர்தா |
| ப.சர்மிளா | பா.கீர்த்திகா | சி.சுஜந்தினி | |

- சிறுவர் நடனம் - முதலாம் இடம்

| | | |
|---|---|---|
| பு.ஆர்த்தி | மு.கவியரசி | பா.புகழ்நிலா |
| சி.லக்சனா | கு.சுகந்தினி | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❖ **ஆரம்பப்பிரிவு போட்டிகள்**

- சித்திரப் போட்டி — பு.கயலிசை - இரண்டாம் இடம் (மாவட்ட மட்டம்)
- விரைவு கணிதம் — சி.தேனிலவன்- இரண்டாம் இடம் (மாவட்ட மட்டம்)

❖ **பொதுநலவாய தினம்**

- கட்டுரைப்போட்டி — மா.கதிர்முகிலன் - இரண்டாம் இடம் (மாவட்ட மட்டம்)
- சித்திரப் போட்டி — த.சஜித்
- சித்திரப் போட்டி — உ.மதுநிசாந்

## ❖ English Day Competitions

- Poem
  M.Kayalarasi - Second Place (District Level)
- Hand Writing
  S.Piranavi - First Place ( Divisional Level)
- Poem
  V.Malaravan - Third Place (Divisional Level)



**M.Kayalarasi**

❖ **விசேட தேவையுடைய மாணவர்க்கான போட்டிகள் (மாகாண மட்டம்)**

- தனி நடனம் — அ.ஜெனிற்றன் - முதலாம் இடம்
- குழு நடனம் — இடைநிலைப்பிரிவு - முதலாம் இடம்
  ச.பிரசாந் — ச.நிதர்சன் — அ.ஜெனிற்றன்
- குழு நடனம் — ஆரம்பப்பிரிவு - இரண்டாம் இடம்
  பு.ஆர்த்தி — கு.சுகந்தினி
  பி.டதுர்ஷனா — மு.கவியரசி



**அ.ஜெனிற்றன்**

❖ **உளநல தின கட்டுரைப் போட்டி**

| | | |
|---|---|---|
| கீழ்ப்பிரிவு | மா.கதிர்முகிலன் | - முதலாம் இடம் |
| மத்திய பிரிவு | பா.கீர்த்திகா | - முதலாம் இடம் |
| மத்தியபிரிவு | அ.பிரியதர்சினி | - மூன்றாம் இடம் |

❖ **அனர்த்த முகாமைத்துவப் போட்டிகள்**

ஸ்ரீ.அறிஞன் - இரண்டாம் இடம் (மாவட்ட மட்டம்)

❖ **கிளிநொச்சி மாவட்ட கூட்டுறவு சபை நடாத்திய கூட்டுறவு தின கட்டுரைப்போட்டி**

கீழ்பிரிவு பா.கீர்த்திகா - முதலாம் இடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசிரிய ஆளணி - 2011



செல்வி பா.பாலரஜனி, திருமதி வி.சந்திரகுமார், திருமதி நா.விக்னராஜா, செல்வி ர.நிஷாந்தினி, திருமதி சு.சிவாபிரபு, திரு. சி. சுபாகரன், திருமதி க.சண்முகநாதன், திருமதி வி.ஶ்ரீஸ்குமார், செல்வி கே.விஜயராணி, திருமதி மே.கணேஸ், செல்வி லா.துரைரஜனி, திருமதி இ.பானுதாசன், திருமதி சா.பாஸ்கரன், திரு. இ.விக்னராஜ், திருமதி ஜெ.பிரசாந், திருமதி ப.ஆறுமுகநாதன், திரு. த. சரத்பாபு, செல்வி சு.ராஜினி, செல்வி.சி.ஶிவயோகராஜினி, செல்வி தி.நவரத்தினமலர், திருமதி வ.சசிக்குமார், திருமதி அ.ஜெயானந்தன், செல்வி ப.தேவகி, செல்வி வி.வதனி, திரு ஐ.சண்முகராசா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசிரிய ஆளணி - 2012



செல்வி பா.பாலரஜனி, திருமதி வி.சந்திரகுமார், திருமதி நா.விக்னராஜா, செல்வி ர.நிஷாந்தினி, திருமதி சு.சிவாபிரபு, திருமதி க.சண்முகநாதன்
திருமதி வி.ஸ்ரீஸ்குமார், செல்வி கே.விஜயராணி, திருமதி மே.கணேஸ், செல்வி லா.துரைரஜனி, திருமதி இ.பானுதாசன், திருமதி சா.பாஸ்கரன்
திரு. இ.விக்னராஜ், திரு. த.சரத்பாபு, செல்வி சு.ராஜினி, செல்வி தி.நவரத்தினமலர், திருமதி வ.சசிக்குமார், திருமதி அ.ஜெயானந்தன், செல்வி ப.தேவகி,
திருமதி த.சிவசுப்பிரமணியம், திருமதி சு.பேரின்பநாதன், திரு. சி.பாலச்சந்திரன், திருமதி மே.யோகரத்தினம், திருமதி கு.புவனேந்திரன்,
திருமதி ஆ.ஜெயசுந்தர, திருமதி த.சண்முகராசா, செல்வி செ.கிருஸ்ணநந்தினி, திருமதி ரோ.ஜெதீஸ்கரன், திரு. கி.ஜெகஜீவராஜ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசிரிய ஆளணி - 2013

திருமதி இ.பானுதாசன்

திருமதி நா.விக்னராஜா

திருமதி சு.சிவாபிரபு

திருமதி வ.சசிக்குமார்

திருமதி வி.ஸ்ரீஸ்குமார்

செல்வி லா.துரைரஜனி

திரு. இ.விக்னராஜ்

திருமதி த.சந்திரவதனன்

திரு. சி.பாலச்சந்திரன்

திருமதி மே.யோகரத்தினம்

திருமதி ஆ.ஜெயசுந்தர

செல்வி செ.கிருஸ்ணநந்தினி

திரு. சி.சிவானந்தம்

திரு. ஆ.விஜயகுமார்

திருமதி சி.ரூபகாந்தன்

திருமதி சி.இராகுலன்

திருமதி ந.கேதீசன்

திருமதி த.ஆனந்தராசா

திரு. கி.ஜெகஜீவராஜ்

செல்வி பா.பாலரஜனி

திருமதி சா.பாஸ்கரன்

திருமதி நி.அதீதன்

திருமதி க.சண்முகநாதன்

திருமதி மே.கணேஸ்

திருமதி வி.சந்திரகுமார்

திரு. த.சரத்பாபு

திருமதி த.சிவசுப்பிரமணியம்

திரு. சு.பிரபாகரன்

திருமதி கு.புவனேந்திரன்

திருமதி த.சண்முகராசா

திருமதி ரோ.ஜெதீஸ்கரன்

திரு. வீ.சந்திரமோகன்

திரு. மோ.கோகுலன்

திருமதி சி.ஆனந்தராசா

திருமதி கா.லோகேந்திரன்

திருமதி அ.கலேந்திரன்

திருமதி கு.யோகேஸ்வரன்

திருமதி வ.தமிழ்வாணன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆசிரிய ஆளணி 2013

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வித்தியாலய சாரணர் அணி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாணவ தலைவர்கள் 2013



## பாடசாலையின் இன்னிய அணியினர்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடசாலை அபிவிருத்திச் சங்கம் 2010

### (இடைக்கால நிர்வாகம்)

| | | |
|---|---|---|
| தலைவர் | : | திருமதி ஜெ.மாணிக்கவாசகன் |
| செயலாளர் | : | திரு. சி.பாஸ்கரன் |
| பொருளாளர் | : | திரு. சி.சுபாகரன் |
| உபதலைவர் | : | திருமதி சு.சிவாபிரபு |
| உபசெயலாளர் | : | திருமதி வ.தமிழ்வாணன் |
| நிர்வாக உறுப்பினர்கள் | : | திருமதி வ.இந்திராணி (பெற்றோர்) |
| | | திருமதி சி.ரஞ்சினி (பெற்றோர்) |

## பாடசாலை அபிவிருத்திச் சங்கம் 2011

| | | |
|---|---|---|
| தலைவர் | : | திருமதி ஜெ.மாணிக்கவாசகன் |
| செயலாளர் | : | திரு. ச.கேசவராஜன் |
| பொருளாளர் | : | திரு. சி.சுபாகரன் |
| உபதலைவர் | : | திருமதி சு.சிவாபிரபு |
| உபசெயலாளர் | : | திரு. சி.சுந்தரராஜன் |
| நிர்வாக உறுப்பினர்கள் | : | திருமதி இ.பானுதாசன் (ஆசிரியர்) |
| | | திரு. சு.பிரபாகரன் (ஆசிரியர்) |
| | | திருமதி கி.அனுசா (பெற்றோர்) |
| | | திருமதி வ.இந்திராணி (பெற்றோர்) |
| | | திரு. து.கிருஸ்ணசாமி (நலன்விரும்பி) |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடசாலை அபிவிருத்திச் சங்கம் 2012

| | | |
|---|---|---|
| தலைவர் | : | திருமதி ஜெ.மாணிக்கவாசகன் |
| செயலாளர் | : | திரு இ.மயில்வாகனம் |
| பொருளாளர் | : | திருமதி தே.சந்திரவதனன் |
| உபதலைவர் | : | திருமதி இ.பானுதாசன் |
| உபசெயலாளர் | : | திரு. சி.கணேஸ்வரன் |
| நிர்வாக உறுப்பினர்கள் | : | திரு. த.சரத்பாபு (ஆசிரியர்) |
| | | திருமதி சு.சிவாபிரபு (ஆசிரியர்) |
| | | செல்வி பா.பாலரஜனி (ஆசிரியர்) |
| | | திரு. ச.கேசவராஜன் (பெற்றோர்) |
| | | திரு. ஜெயசீலன் (பெற்றோர்) |
| | | திரு. சு.சுதன்ராஜ் (பெற்றோர்) |
| | | திரு. கு.கிருஸ்ணகுமார் (பெற்றோர்) |
| | | திரு. இரத்தினகுமார் (பெற்றோர்) |
| | | திரு. சுந்தரராஜன் (பெற்றோர்) |
| | | திருமதி சி.ரஞ்சினி (பெற்றோர்) |
| | | திருமதி சுகந்தினி (பெற்றோர்) |
| | | திரு. து.கிருஸ்ணசாமி (நலன்விரும்பி) |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# பாடசாலை அபிவிருத்திச் சங்கம் 2013

| | | |
|---|---|---|
| தலைவர் | : | திருமதி ஜெ.மாணிக்கவாசகன் |
| செயலாளர் | : | திரு. இ.மயில்வாகனம் |
| பொருளாளர் | : | திரு. சி.சிவானந்தம் |
| உபதலைவர் | : | திருமதி இ.பானுதாசன் |
| நிர்வாக உறுப்பினர்கள் | : | திருமதி சா.பாஸ்கரன் (ஆசிரியர்) |
| | | திருமதி சு.சிவாபிரபு (ஆசிரியர்) |
| | | திரு. சு.பிரபாகரன் (ஆசிரியர்) |
| | | திரு. ஆ.விஜயகுமார் (ஆசிரியர்) |
| | | செல்வி பா.பாலரஜனி (ஆசிரியர்) |
| | | திரு. சி.கணேஸ்வரன் (பெற்றோர்) |
| | | திரு. கு.கிருஸ்ணகுமார் (பெற்றோர்) |
| | | திரு. ச.இராமலிங்கம் (பெற்றோர்) |
| | | திருமதி சி.ரஞ்சினி (பெற்றோர்) |
| | | திருமதி கு.சிவஞானம் (பெற்றோர்) |
| | | செல்வி செ.தபிலாஷா (பழைய மாணவி) |
| | | திரு. க.பேரின்பராஜா (உதவிக்கல்விப் பணிப்பாளர், வலயக்கல்விப் பணிமனை, பிரதிநிதி) |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடசாலை நிகழ்வுகளின் பதிவுகள் சில...







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடசாலை நிகழ்வுகளின் பதிவுகள் சில...







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org